**பிடபெத்தர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பிடபெத்தர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மான வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 168,549 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு நிர்மான வேலை மேற்கொள்ளும் போது பண ஏற்பாடுகள் வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளதால் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலை பகுதிக்காக சபை நிதியத்தில் இருந்து செலுத்துவற்காக கடந்த ஆண்டு ஜுன் சபை தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 4,555,981 தொகைக்கான 05 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத் தொகை ரூபா 786,100 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை சரி செய்வேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,154,163 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2008 ஆண்டு முதல் பல வருட காலாமாக காணப்படும் பெறு மதிகளாகக் காணப்பட்டதுடன் அது தொடர்பாக தகவல்கள் அடங்கிய அட்டவணைகளும் காணப்படவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 150(4) | வருமானம் அறவீடு செய்வதற்காக செயலாளர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வருடாந்தம் வர்த்தமானி மூலம் வருமானத்தை பிரசுரித்து அந்த வருமானத்தை அறவீடு செய்வதற்காக சபையில் காணப்படும் மனித மற்றும் பௌதீக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வழங்களை பயன்படுத்தி வருமானம் சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியர சின் நிதிப் பிரமாணம் 571 | 03 வருட காலத்தை மிகைத் துள்ள ரூபா 295,522 இற்கான நிர்மான வேலை வைப்பு மீதிகள் மற்றும் ரூபா 481,969 தொகைக்கான மூன்று மாத பிணைப்பண மீதியை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 4,068,519 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,098,366 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,529,500 | 1,577,735 | 1,564,355 | 966,756 | 1,453,750 | 1,468,827 | 780,892 | 953,376 |
| வாடகை | 4,343,000 | 4,571,985 | 4,033,753 | 2,177,792 | 4,981,000 | 11,176,728 | 11,199,926 | 1,639,560 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 305,100 | 746,858 | 753,858 | 71,522 | 263,100 | 387,178 | 379,178 | 78,522 |
| ஏனைய வருமானங்கள் | 11,989,000 | 12,057,488 | 9,779,381 | 18,871,941 | 11,915,500 | 9,204,520 | 9,025,283 | 16,593,834 |
| மொத்தம் | 18,166,600 | 18,954,066 | 16,131,347 | 22,088,011 | 18,613,350 | 22,237,253 | 21,385,279 | 19,265,292 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| 2010 பெப்ரவரி 28 திகதிய 1824 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை முன்னேற்றப்பட்ட பிரதேசங்களாக வெளியிடப்பட்டிருந்த போதிலும், வீதவரி அறவீடு செய்யும் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனங்களுக்காக வீதவரி அறவிடப்பட வேண்டும். | வீதவரி விதிப்பதற்காக உரிய பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்வேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 267,517 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 31,856 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 299,373 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 13,377 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 285,996 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு கே. படிவம் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 1,805,203 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 15,911,361 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை தண்டம் மற்றும் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பணம் பெறுவதற்காக மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் விண்ணப்பித்திருந்த போதிலும், முறைப் பிரகாரம் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலை பேறான அபிவிருத்தி குறிக்கோள் கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தி லுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவ தற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் நெருங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். | இதுவரை ஆண்டிற்குரிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை இலக்காக வைத்து திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 10 மிகை பதவியணி யினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகை கள் பதவிக்கான முறைப்படுத்துவதற் காக மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கான பிரதான செயலாளரிடம் கோரியுள்ளதுடன் இதுவரை வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. மிகைப்பதவி எண்ணிக்கை அமைய மற்றும் பிரதியீடு என சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| சபையின் ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்தத் தவறியிருந்த ஊழியர்கள் 08 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 34,850 தொகை நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் மீதி விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஊழியர்கள் 08 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 34,850 தொகையினை அறவீடு செய்வதற்கு கடிதத்தின் மூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்படாவிடின் பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 செயற்பாட்டு திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 1533/16 கொண்ட மற்றும் 2008 ஜனவரி 25 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி 2019 ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 26 வர்த்தக நிலையங்கள் காணப்பட்டதுடன் இந்த நிறுவனங்களின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தேசம் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும் ஒழுங்குபடுத்தல் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 182,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் படி செயற்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத நிறுவனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | இலக்கம் 2094 மற்றும் 2018 ஒப்தோபர் 19 திகதிய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிடபெத்தர மொரவக பாதையில் அங்கீகாரம் இன்றி காட்சிப்படுத்தப்பட்டுள்ள 13 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 35,755 இற்கான கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது கட்டணங்கள் செலுத்தாத நிறுவனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |